IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஆசிரியர் ஆத்திசூடியும் ஆசிரியர் திறன் மேன்பாடும்

**(Aachiriyar Aathichudi and Teacher Skill Development)**

**முனைவர் மூ.பாலசுப்பிரமணியன்**
இணைப் பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002.

**Dr. M. Balasubramanian**
Associate Professor
Tamil Studies & Researshc
Annamalai University
Annamalai Nagar 608 002.

**ஆய்வுச்சுருக்கம்:** தமிழ் இலக்கிய வடிவங்களில், ஆத்திசூடி ஓரடி இலக்கியமாகும். ஆத்திசூடிகள் சூழல்களுகேற்ப பாடுபொருட்களைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் பணிச்சூழல் மாற்றங்களையும் திறன்மேன்பாட்டுச் சிந்தனைகளையும் பேசும் ‘ஆசிரியர் ஆத்திசூடி’ அத்தகையது. இவ்விலக்கியம், மாறிவிட்ட உலகியல் சூழலுக்குத் தக்க ஆசிரியர்கள் தங்களை எங்ஙனம் தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் திறன்களை வளர்க்கும் முறைகளையும் பேசியுள்ளது. ஆசிரியர் திறன்களை மேன்படுத்துவதற்கான ஆய்வுகளைப் பல கல்வி நிறுவனங்கள் செய்துள்ளன. நியூயார்க்கிலுள்ள Indeed Editorial Team என்ற ஆசிரியர் தேர்வு வாரியம் பரிந்துரைத்துள்ள திறன்மேன்பாட்டுச் சிந்தனைகள் அ.சிவபெருமான் இயற்றியுள்ள் ‘ஆசிரியர் ஆத்திசூடி’ கருத்துக்களை ஒத்திருக்கின்றன.

**திறவுச்சொற்கள்:** ஆசிரியர், திறன்மேன்பாடு, கல்வி, பள்ளி, கல்லூரி, கல்வியல், ஆத்திசூடி, ஆசிரியர் ஆத்திசூடி, ஔவையார், பாரதியார்

## முன்னுரை

‘வெள்ளத்தனைய மலர் நீட்டம்’ என்பது போல் சிறந்த ஆசிரியர்களால்தான் ஒரு நாட்டின் முன்னேற்றம் சாத்தியமாகிறது. ஆசிரியர்கள் உலக இயக்கத்திற்கான பின்னியக்கமாகத் திகழ்கிறார்கள். அவர்கள் மாணவர்களுக்குக் கற்பித்தல் என்ற பணியோடு அந்தந்த நாட்டின் பண்பாட்டு விழுமியங்களையும் மாற்றங்களையும் கண்டுணர்த்தி நெறிப்படுத்துகின்றனர். இன்றைய நிலையில் ஆசிரியர்களுக்கான வரையறையும் இலக்கணமும் பரந்து விரிந்ததாகிவிட்டன. நாளும் தங்களைப் புதுப்பித்துக் கொண்டாலொழிய கல்விச் சூழலில் ஆசிரியர்களால் நிற்க முடியாத நிலை

ஏற்பட்டுவிட்டது. ஆகையால், ஆசிரியர்கள் தங்களைப் பல்வேறு தரவுகளால் மேன்பாடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். பயிற்சிகளுக்குள்ளும் நூல்களுக்குள்ளும் மட்டும் ஆசிரியர் மேன்பாட்டுச் சிந்தனைகள் விவாதிக்கப்படவில்லை; படைப்புலகிலும் பேசப்பட்டுள்ளன. அப்படி ஆசிரியத் திறன் மேன்பாட்டை முன்வைத்து 'ஆசிரியர் ஆத்திசூடி' என்னும் நூல் இயற்றப்பட்டுள்ளது. அவ்விலக்கியம் ஆசிரியர் மேன்பாட்டிற்காக எடுத்துரைத்துள்ள கருத்துக்களை, Indeed Editorial Team என்ற குழுவின் பரிந்துரைகளோடு இக்கட்டுரை ஒப்பிட்டு ஆராய்கின்றது.

**ஆத்திசூடி**

காலந்தோறும் வடிவ ஒழுங்கின் அடிப்படையில் பல்வேறு இலக்கியங்கள் தமிழில் தோன்றியுள்ளன. தொல்காப்பியம் வகுத்தளித்துள்ள இலக்கிய வகை, வகைமைகளின் நீட்சியாகவே அவ்விலக்கிய வடிவங்கள் அமைந்திருக்கக் காண்கிறோம். அங்ஙனம் வடிவ நோக்கில், அறக் கருத்துக்களை எடுத்துரைக்கும் இலக்கியங்களில் ஆத்திசூடியும் அடங்கும். ஆத்திசூடி ஓரடி கவிதையாகும். தொல்காப்பியம் உரைக்கும் செவியறிவுறுத்தல், வாயுரை வாழ்த்து போல்வன பெறுகின்ற வரன்முறைகளோடு ஆத்திசூடிகள் அமைந்துள்ளன. ஆத்திசூடிக்கென தனியாக இலக்கணம் வரையறுக்கவில்லை என்றாலும் தொல்காப்பியரின்,

'நாடுதல் இனிப் பொருள்நனி விளங்க
யாப்பினும் தோன் யாத்து அமைப்பதுவே" [1]

என்னும் விளக்கத்தைக் காட்டுவர். ஆராய்வதற்கு இடமின்றி தெளிவாகப் பொருள் விளங்குமாறு ஆத்திசூடி அமைந்திருப்பதால் நூற்பாவிற்குத் தொல்காப்பியர் சுட்டிய கருத்தை ஆத்திசூடிக்கும் இலக்கணமாகக் காட்டுகின்றனர். பொருள் தெளிவுடையதாய் இருசீர் அமைந்த ஓரடியாய் வருவது ஆத்திசூடியின் இலக்கணமாகிறது என்பார் ந.சுப்புரெட்டியார்.[2] ஆத்திசூடி தமிழ் எழுத்துக்களின் அகர வரிசையில் பாடப்படுகின்றது. உயிரும் உயிர் மெய்யுமான தமிழ் எழுத்துக்களின் நிரலை, முதல் எழுத்துக்களாக வைத்து எழுதப்படுகின்றது. இது நினைவு வைப்பதற்கு எளியமையுடையனவாக இருப்பதால் இம்முறையைப் பின்பற்றியிருக்கின்றனர். ஆத்திசூடி செய், செய்யாதே என்னும் கருத்துக்களைக் கட்டளை வாக்கியத்துடனே கூறும் முறையைக் கொண்டுள்ளது. இவ்விலக்கியம் சிறுவர்களுக்கு அரிச்சுடி கற்பிக்கும் வகையிலும், அறக்கருத்துக்களை எடுத்துரைக்கும் நோக்கிலும் அமைத்திருக்கக் காணலாம். ஔவையாருக்குப் பின் தமிழில் பதினெழு (17) ஆத்திசூடிகள் தோன்றியுள்ளன. அந்தவகையில், பேராசிரியர் அ.சிவபெருமான் 2017-ல் 'ஆசிரியர் ஆத்திசூடி' என்னும் ஆத்திசூடியைப் படைத்துள்ளார்.

**ஆசிரியர் ஆத்திசூடி**

ஆசிரியர்கள் தங்களின் முதன்மையான கற்பித்தல் பணியோடு ஆய்விலும் ஈடுபடுவர். வெகு சிலரே இலக்கியப் படைப்பிலும் கவனம் செலுத்துவர். முனைவர் அ.சிவபெருமான், 'பேராசிரியர், ஆராய்ச்சியாளர், படைப்பாசிரியர், பதிப்பாசிரியர், இலக்கியவாதி, ஆன்மீகவாதி, சோதிடக்கலை நிபுணர், சொற்பொழிவாளர், சமூகச் சேவகர்' எனப் பன்முகத்தன்மைக் கொண்டவர். பேராசிரியப்

பணியில் 30-ஆண்டுகளுக்கு மேலாகப் பணியிலிருந்து போது பல அரிய நூல்களைத் தமிழுலகிற்குத் தந்துள்ளார். தமிழ் அறிஞர் அடிகளாசிரியரின் நூல்களைத் தொகுத்தும், பகுத்தும் பதிப்பித்துள்ளார். 29 நூல்களைப் படைத்துள்ளார். 39 நூல்களுக்குப் பதிப்பாசிரியராகவும், 6 நூல்களுக்கு உரையாசிரியராகவும், 3 நூல்களுக்கு இணையாசிரியராகவும் இருந்துள்ளார்.[3] தொடர்ந்து இலக்கியத்தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அ.சிவபெருமான், தற்பொழுதும் பல படைப்புகளைத் தந்து கொண்டிருக்கிறார். ஓய்விற்குப் பின்னும் பல ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டும் வருகிறார். அவரின் நூல்கள் பலவற்றிற்குப் பரிசுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக 1997-ல் அவர் ஆய்ந்து எழுதி 'இலக்கியங்களில் வானியல்' என்னும் நூலுக்குத் தமிழ்நாடு அரசின் சிறந்த நூலுக்கான முதல் பரிசு கிடைத்தது. இவரின் தொடர் ஆய்வுப் பணிகளைப் பாராட்டி அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 'சிறந்த ஆராய்ச்சியாளர்' விருதினை 2009-ல் வழங்கியுள்ளது. அவர் இன்றைய ஆசிரியர்களின் மேன்பாட்டிற்கு உதவும் வகையில் 'ஆசிரியர் ஆத்திசூடி' என்னும் இலக்கியத்தைப் படைத்துள்ளார்.

ஆத்திசூடிக்கான இலக்கணத்தோடு அமைந்துள்ள இவ்விலக்கியப் படைப்பு, 'ஆசிரியப் பணியே அறப்பணி' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. இந்நூல் 2017-ல் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டதாகும். அந்நூலை வரவேற்றுப் பாராட்டிய பலர், தங்கள் சொந்த செலவிலேயே பதிப்பதித்துத் தமிழகமெங்கும் இலவசமாக வழங்கியுமுள்ளனர். நூலுக்கான வரவேற்பைக் கண்ட நூலாசிரியர், அந்நூலை விரிவாக்கம் செய்து பெருநூலாக அவ்வாண்டே வெளியிட்டார். பெருநூலாக்கம் செய்த போது ஆசிரியர்களின் திறன்களை வளர்க்கும் கருத்துக்களை முன்வைத்து, 'ஆசிரியர் ஆத்திசூடி' இயற்றி அந்நூலில் சேர்த்துள்ளார். அவ் ஆத்திசூடியில் 96 வரிகள் உள்ளன.

ஆசிரியர் ஆத்திசூடியில் உயிரெழுத்து வரிசையில் 12-ம், உயிர்மெய் எழுத்துக்களில் ககர வரிசையில் 11-ம், சகர வரிசையில் 11-ம், ஞகர வரிசையில் 5-ம், தகர வரிசையில் 12-ம், நகர வரிசையில் 11-ம், பகர வரிசையில் 12-ம், மகர வரிசையில் 12-ம், யகர வரிசையில் 2-ம், வகர வரிசையில் 8-ம் ஆக மொத்தம் 96 பாக்கள் உள்ளன. இப்பாக்கள் பெரும்பாலும் ஈரசைச் சீர்களாகவும், சிற்சில இடங்களில் மூவசைச் சீர்களாகவும் அமைந்துள்ளன. மேலும், பாக்கள் அனைத்தும் குறளடிகளாக வந்துள்ளன. ஆத்திசூடிகளில் ஒளகாரத்தோடு கூடும் மெய்யெழுத்துக்களைப் பெரும்பாலும் புலவர்கள் பயன்படுத்தியதில்லை. ஆனால், அ.சிவபெருமான் தன் படைப்பாற்றல் திறன் வெளிப்படுமாறு ஒளகாரத்தில் வரும் உயிர்மெயெழுத்துகளில் பாடியுள்ளார். மேலும், ஞகரத்தில் வரும் சொற்களை ஆத்திசூடிகளில் அரிதாகக் கையாண்டுள்ளனர். ஞகரத்தைப் ஒளவையார் ஒன்றும், பாரதியார் ஐந்தும், சிற்பி ஐந்துமாகப் பயன்படுத்தியுள்ளார். அ.சிவபெருமானே ஞகரத்தை அதிகம் பாடியவராக அறியப்படுகிறார். அதுபோல் வகரத்தில் அதிக வரிகளில் (8) பாடியவராகவும் உள்ளார். மேலும், யகரத்தைப் பாரதி போல் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். எடுத்துக்கொண்ட பாடு பொருளுக்குத்தக்கச் சொற்களைக் கையாண்டு, ஆத்திசூடி இலக்கியத்திற்கான இலக்கணம் வழுவாமல் ஆசிரியர் ஆத்திசூடியைப் படைத்தளித்துள்ளார்.

**ஆசிரியத் திறன்மேன்பாடும் ஆசிரியர் ஆத்திசூடியும்**

மாணவர்களுக்குக் கற்பித்தல் மட்டுமே ஆசிரியப் பணி என்ற நிலை இன்று இல்லை. ஆசிரியர்கள் தங்களை எப்பொழுதும், மாணவனாகவும், ஆய்வாளனாகவும், நாளும் புதுப்பித்துக் கொள்பவராகவும், புதிய நோக்கில் சிந்திக்கும் முற்போக்கானவராகவும் வைத்திருத்தல் வேண்டும். ஆசிரியர் வாழ்நாள் மாணவன் என்னும் நினைப்பு ஒவ்வொரு ஆசிரியனுக்குள்ளும் இருத்தல் அவசியமாகிறது. தன்னை இன்றைய ஆசிரியராக உணராமல், அன்றைய குருவாக எண்ணுகிற போது அவருக்கு மட்டுமல்லாது சமூகத்திற்கும் சிக்கல் உருவாகிவிடுகிறது. இத்தகைய சிக்கல்களைப் போக்கும் பொருட்டு, பள்ளி அல்லது கல்லூரி பல்கலைக்கழக ஆசிரியர்கள் செயலாற்றுவதற்கான திறன்மேன்பாட்டுச் சிந்தனைகளை அறிஞர்கள் பலர் எடுத்துரைத்துள்ளனர். உலகளவில் ஆசிரியர்களுக்கான திறன்வளர்ப்புக் குறித்துப் பலர் வரையறை செய்துள்ளனர். நியூயார்க்கில் பணியாற்று பேராசிரியர் ஜானெல் காக்ஸ் (Janelle Cox) என்பார் ஆசிரியர்களுக்கான 15 திறன் மேன்பாட்டுகளை வரையறை செய்துள்ளார்.[4] மேலும், நியூயார்க்கிலிருந்து இணைய வழியாகச் செயல்படும் Indeed Editorial Team என்ற உலக ஆசிரியர் தேர்வுக்குழு ஒன்று சிறந்த ஆசிரியர்களுக்குப் பத்துப் பண்புகள் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளது.[5] அக்குழுப் பரிந்துரைத்தவாறு பேராசிரியர் அ.சிவபெருமான் இயற்றியுள்ள, ‘ஆசிரியர் ஆத்திசூடி’யின் செய்திகள் அமைந்திருக்கின்றன. அங்ஙனம் Indeed Editorial Team விளக்கும் திறன் மேன்பாட்டுச் செய்திகளோடு ஆசிரியர் ஆத்திசூடியின் கருத்துக்களை ஒப்பிட்டு நோக்கலாம்.

**திறனாய்வுச் சிந்தனை திறன் (Critical thinking skills)**

கற்பித்தல் என்பதைத் தாண்டி நிறுவனங்களின் நோக்கத்திற்கேற்ற எதிர்ப்பார்ப்பும் ஆசிரியர்கள் மீது வைக்கப்படுகிறது. பெற்றோர்களின் எண்ணங்களைப் பூர்த்திச் செய்யும் நோக்கிலும் ஆசிரியர்கள் செயல்பட வேண்டியிருப்பதால், இன்றைய ஆசிரியர்கள், கற்பித்தல்; திறன்மிக்கப் பணியாளர்; உளவியலாளர் எனப் முப்பரிமாணநிலையில் பணியாற்ற வேண்டி நிலையில் உள்ளனர். இதனை அறிந்துள்ள அ.சிவபெருமான் அவர்கள்,

“ஒழுக்கம் போற்று”
“ஓங்கிக் கற்றுரை”
“ஔவைபோல் அறம்உரை”
“கல்வித் திட்டங்கொள்”
“காப்பாய் மாணவம்”
“திருத்தமாய்ப் பயிற்று”

போன்ற ஓரடிப்பாக்களை இயற்றியுள்ளார். ஓர் ஆசிரியர் நன்கு கற்றுணர்ந்து தன்னைத் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும், பின்னர், நல்லாசிரியனாக மாணக்கர்களுக்குக் கற்றுரைக்க வேண்டும், அக்கற்பித்தல் பாடத்திட்டத்தின்படி அமைய வேண்டும், மாணவர்களின் மனநிலை அறிந்து கற்பிக்க வேண்டும் எனச் சிவபெருமான் உரைத்துள்ளார். திறனாய்வுச் சிந்தனை திறன் அமையப் பெற்ற ஆசிரியர்களுக்கே இம் முப்பரிமாண செயல் கைவரப் பெறும். இத்திறனை

வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில்தான் படைப்பாசிரியர் ஆத்திசூடியில் இக்கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

**பொறுமை (Patience)**

ஒரு வகுப்பறையில் பல சூழல் நிலைகளிலிருந்தும் வரும் மாணவர்கள்; கற்கும் திறன் வேறுபடுகின்ற மாணவர்கள் எனப் பலவகைப்பட்டவர்கள் இருப்பர். ஆசிரியர்கள் தங்கள் சொந்த எதிர்ப்பார்ப்புகளுக்கும் மாணவர்களின் தனித்துவமான ஆளுமைகளுக்கும் இடையில் சமநிலையைப் பராமரிக்க வேண்டும். அப்பொழுதுதான் வகுப்பறையை அமைதியாக வைத்திருக்க முடியும். ஆசிரியர்கள் எச்சூழ்நிலையிலும் உணர்வுகளுக்கு ஆட்பட்டுவிடாமல் பொறுமைக் காக்க வேண்டும் என்று 'ஐனெநநன நுனவைழசயைட வுநயஅ' குழுக் கூறியுள்ளது. இக்கருத்தை,

"கேள்விக்கு விடையறு"
"ஊைடியென நசநசக்காய்"
"தவறின்றி ஓதுக"
"நடுவுநிலை நாடு"
"மௌனம் பழக்கு"

எனச் சிவபெருமான் பாடியுள்ளார். பலவகைப்பட்ட மாணவர்களை எதிர் கொள்கிற போது அவர்களுக்கான எதிர்ப்பார்புகளைப் புரிந்து கற்றுக் கொடுப்பதோடு, முன்னுதாரணமாக நடந்து, அவர்களுடன் கலந்துரையாடி மாணவர்களின் ஐயங்களைத் தீர்க்க வேண்டும். மேலும், புரிதல் வேறுபாடு காரணமாக மாணவர்களுக்குள்ளும், ஆசிரியர் மாணவரிடையேயும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாமல் அமைதியாக இருக்க வேண்டும் என்கிறார்.

**தொடர்பு திறன் (Communication skills)**

ஆசிரியர்கள் உடல், வாய்மொழி மற்றும் எழுத்துத் தொடர்பு ஆகியவற்றில் சிறந்து விளங்க வேண்டும். மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை முன்வைத்து, பாடப் பொருட்களையும் ஐயங்களையும் தெளிவுபடுத்துவதே சிறந்த ஆசிரியர்களுக்கான தகுதியாகும். இத்திறனை தொடர்பு திறன் வெளிப்பாடு என்று 'Indeed Editorial Team' கூறுகின்றது. ஆசிரியர்கள் வகுப்பறையில் நிமிர்ந்து நின்று அடிக்கடி புன்னகைத்து, மாணவர்களை நேருக்குநேர் கண்களால் நோக்குகிற போது, அவர்கள் தன்னம்பிக்கையுடனும் அன்பாகவும் தோன்றுவார்கள். இம்முறை மாணவர்கள் படிப்பில் அதிக ஈடுபாடு காட்டுவதற்கு வழிவகுக்கும். அதனால் ஆசிரியர் முதலில் தங்கள் உடலையும் மனநலத்தையும் பேண வேண்டும் என்கிறார் சிவபெருமான். அதனை,

"எழுதிப் பழகு"
"சொல்நயம் புகட்டு"
"தூய்மை உடல்உளம் கொள்"
"மிடுக்குடன் தூய உடுத்து"
"தௌவையாய் அன்பு கொள்"

என்னும் பாக்களால் உரைத்துள்ளார். ஆசிரியர் தன்னை மிடுக்குடனும் தூய்மையாக வைத்திருத்தல் அவசியமானதாகும். ஆசிரியருக்கான துணிவையும், தன்னம்பிக்கையையும் உடல், உடை பாதி தந்துவிடுகிறது என்பதால் படைப்பாசிரியர் அங்ஙனம் கூறியுள்ளார்.

**அமைப்புச் சார்ந்த திறன்கள் (Organisational Skill)**

ஆசிரியர்கள் தங்களின் அன்றாடப் பணிகளைக் கட்டமைக்கவும், ஒழுங்கமைக்கவும் முன்னுரிமை அளிக்க வேண்டும். பணிபுரியுமிடத்தில் முறையாகத் திட்டமிட்டு நடந்தால், நேரத்தையும், பணிகளையும் திறமையாக நிர்வகிக்கலாம். இத்திறன் ஆசிரியர்களின் தகவல் தொடர்பு திறனையும், பகுப்பாய்வு சிந்தனையும் வளர்க்கும். ஆகையால், ஆசிரியர்கள் உடலையும் உள்ளத்தையும் புத்துணர்வோடு வைத்துக் கொண்டு, பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என்கின்றனர். இக்கருத்தை 'ஆசிரியர் ஆத்திசூடி'

"கல்வித் திட்டங்கொள்"
"சோர்வின்றி ஓதிடு"
"நுண்ணறிவு நுட்பங்கொள்"
"நொடிதொறும் உழைத்துயர்"

என்னும் பாக்களின் வழிப் பேசியுள்ளது.

**படைப்பாக்கத் திறன் (Creative thinking abilities)**

மாணவர்களை நன்னூலார், 'முதல், இடை, கடை' என மூன்றாகப் பிரிப்பார். இதனை,

"அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்." [6]

என்னும் நூற்பாவால் அறியலாம். மேலை நாட்டு அறிஞர்களும் மாணக்கர்களை இங்ஙனமே பகுத்துள்ளனர். இவ்வாறு வகுப்பறையில் மூன்று நிலையில் இருக்கும் மாணவர்களை ஆசிரியர்கள் ஒரே முறையில் எதிர்க்கொள்ள முடியாது. மூன்று மாணவர்களையும் ஒருசேரக் கையாள வேண்டும் என்பதை வலியுறுத்துவது படைப்பாக்கத் திறனாகும். மேலை நாட்டார் இவ்வகை மாணவர்களை வயது கொண்டு பகுக்கின்றனர். என்றாலும், கடை மாணாக்கரை, பாடுதல், வரைதல், பலகுரல், நடிப்புப் போன்றவற்றாலும், திரைப்படம், இணையம் போன்றவற்றால் இடை மாணாக்கரையும், அறிஞர்களின் மேற்கோள்களால் முதல் மாணாக்கரையும் எதிர்கொள்ள வேண்டும் என்கின்றனர். அதனையே,

"ஔவைபோல் அறம்உரை"
"கேள்விக்கு விடையறு"
"ஞான ஒளியூட்டு"
"நைந்தார்க்கும் நலமளி"
"பையவே பதியவை"

"மும்முறை கற்றளி"

என அ.சிவபெருமான் உரைக்கின்றார். இதனால் ஆசிரியர்கள் மூன்றுவகையான மாணவர்களுக்கும் கல்வியை எவ்வடிவிலாவது கொண்டு சேர்க்க வேண்டும் என்பது விளக்கம் பெறுகிறது.

தலைமைத்துவத் திறன் **(Leadership skills)**

ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய திறன்களில் முதன்மையானதாகக் கருதப்படுவது தலைமைத்துவமாகும். தலைமைப் பண்பு என்பது ஒரு பணியை ஒருங்கிணைத்து வழி நடத்துவதாகும். வகுப்பறைக்கு உள்ளும் வெளியிலும் திட்டமிட்டு, ஒருங்கிணைத்து, வழி நடத்தலே தலைமைத்துவம். இத்திறன், ஆளுமைப் பண்பையும், மொழித்திறனையும், கற்பித்தல் திறனையும் உள்ளடக்கியதாக இருப்பதால், ஆசிரியர்களுக்கு மிகவும் வேண்டப்படுவதாக அறிவுறுத்தப்படுகிறது. வள்ளுவர்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." [7]

என்ற குறள் வழிப் பயன் நிறைந்த சொற்களையுடையவர்களின் பெருமையை; அவர் கட்டளையின் வழி அறியலாம் என்கிறார். தலைமைத்துவத்திறனே ஆளுமைக்குரிய பண்புகளை வளர்க்கும். இதனையே தொல்காப்பியரும்

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" [8]

என்பார். ஆசிரியர் ஆத்திசூடியும்,

"ஈடில்லார் ஆசிரியர்"
"ஊழறுக்கும் ஆசான்தாள்"
"ஓங்கிக் கற்றுரை"
"சூட்சமம் அறிந்துரை"
"பீடுறப் பேர்நிறுத்து"
"வாழ்த்தி உரை"

என்பன போன்ற ஓரடிப் பாக்களின் வழி ஆசிரியர்களுக்கான தலைமைத்துவத்திறனைப் பேசியுள்ளது.

**குழுப்பணித் திறன் (Capacity for teamwork)**

தலைமைத்துவத்தைப் போலவே, குழுப்பணியும் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய திறனாகிறது. கல்வி நிலையங்களில் மற்ற ஆசிரியர்களுடனும் ஊழியர்களுடன் கனிவாகவும் திறம்படவும் ஆசிரியர்கள் பழக வேண்டும். இத்திறனை,

"கிழமை கொண்டு வாழ்"

"கெடுத்து வாழாதே"
"சார்ந்தாரைச் சால்புறச்செய்"

என்னும் பாக்களால் அ.சிவபெருமான் உரைத்துள்ளார்.

**நேர மேலாண்மை திறன் (Time management skills)**

ஆசிரியர்கள் தங்கள் கல்வி மற்றும் தனிப்பட்டப்; பணிகளுக்கான அட்டவணையைத் திட்டமிட்டுக் கடைப்பித்தலே நேர மேலாண்மையாகும். வகுப்பறை மட்டுமல்லாது வெளியே உள்ள பணிகளைத் திட்டமிட்டுச் சிக்கலில்லாமல் செயல்படுத்த வேண்டும். நேர மேலாண்மை திறன்களை வளர்த்துக் கொள்வதன் வழி ஆசிரியர்கள் சிறந்து விளங்க முடியும் என்கிறது 'Indeed Editorial Team'. அ.சிவபெருமான் அவர்களும் நேர மேலாண்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார். அவர் தனது ஆத்திசூடியில்,

"ஒழுக்கம் போற்று"
"நொடிதொறு உழைத்துயர்"
"பயிற்சிசெய முயற்சிகொள்"

எனப் பாடியுள்ளார்.

**கணினி திறன் (Computer skills)**

வகுப்பறைகள் ஆசிரியர்களை மட்டும் நம்பியிருக்கவில்லை. இன்று தொழில்நுட்பம் தவிர்க்கவியலா இடத்தைப் பிடித்துவிட்டது. ஆசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி என்பது முதன்மையான தகுதியாக மாறிவிட்டது. கல்விப் பணிகளைக் கணினியின் துணைக் கொண்டு மேற்கொள்ளும் ஆற்றல் இன்றைய ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும். கணினி மட்டுமல்லாது இணையத் தளங்கள் சார்ந்த அறிவும் மிக அவசியமானதாகும். ஆகையால் ஆசிரியர்களுக்கு,

"துணைக்கருவி துணைகொள்"
"யந்திரம் போற்று"
"கைத்தொழில் பயிற்று"

எனத் தனது ஆத்திசூடியின் வழிச் சிவபெருமான் உரைக்கிறார்.

**முரண்பாடுகளைத் தீர்க்கும் திறன் (Conflict resolution skills)**

கல்விச்சூழல்களில் எழும் முரண்பாடுகளைத் தீர்க்கும் திறனும் ஆசிரியர்களுக்கு வேண்டுமென 'Indeed Editorial Team' பரிந்துரைத்துள்ளது. பலதரப்பட்ட மாணவர்களை ஆசிரியர்கள் எதிர்க்கொள்ள வேண்டியுள்ளமையால், அவர்களுக்குள் எழும் முரண்களைத் தீர்க்கும் திறன் ஆசிரியர்களுக்கு வேண்டுமென்கிறது. மாணவர்களின் குறைகளை முன்பே அறிந்து அவற்றைப் போக்க நடவடிக்கை எடுத்தலே பாதி பிரச்சனைகளைத் தீர்க்கும். இங்ஙனம் மாணவர்களைத் தொடர்ந்து கவனித்து அவர்களின் தேவையறிந்து உதவ வேண்டும் என்பதை,

"காப்பாய் மாணவம்"

"கோனாக்குக் குடிகளை"
"சுடுசொல் வேளாய்"
சொல்நயம் புகட்டு"
"ஞேயமாய்க் காத்திடு"
"நெறிபிறழ விட்டிடேல்"
"நைந்தார்க்கும் நலமளி"
"மேதையாய்ச் சிறுவராக்கு"
"வீழாமல் முன்தடு"
"வெளியுணர் நீக்கு"
"வேண்டவார்க்கு வேணஅளி"

என்னும் ஆத்திசூடி வரிகளால் பேசியுள்ளார். மாணவர்களின் நலமே ஆசிரியரின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை ஆத்திசூடியின் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**தொகுப்புரை**

- உலகமயமாக்கலும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் கல்வியல் சூழலைப் பெரிதும் மாற்றியமைத்துவிட்டன. ஆசிரியர்களுக்குக் கற்பித்தல் பணியைத் தாண்டி மேன்பட்டத் திறன்கள் அமைத்திருத்தல் அவசியமாகிறது.
- நல்ல மாணவர் சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தில் ஆசிரியர் திறன் மேன்பாட்டுக் கருத்துகளை அறிஞர்கள் பரிந்துரைத்துள்ளனர். நியூயார்க்கில் இருக்கும் Indeed Editorial Team என்னும் ஆசிரியர் தேர்வு வாரியம் திறன்மிக்க ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய திறன்களைப் பரிந்துரைத்துள்ளது.
- அக்குழுப் பரிந்துரைத்துள்ள திறன் மேன்பாட்டுக் கருத்துக்கள் பேராசிரியர் அ.சிவபெருமான் படைத்துள்ள 'ஆசிரியர் ஆத்திசூடி' கருத்துக்களோடு ஒப்பிடும் வகையில் அமைந்திருக்கின்றன.
- ஆசிரியர்களின் பணிகளையும், கடமைகளையும் 'ஆசிரியர் ஆத்திசூடி' எடுத்துரைக்கின்றது. அது உரைக்கும் கருத்துக்கள் ஆசிரியர்களின் திறன் வளர்க்குமாறு அமைந்துள்ளன.
- Indeed Editorial Team பரிந்துரைக்கும் கருத்துக்களை ஆசிரியர் ஆத்திசூடி பெரிதும் ஒத்திருக்கிறது.

**முடிவுரை**

தமிழின் இலக்கிய வகைமையும் நோக்கும் காலந்தோறும் மாற்றங்களைக் கண்டுள்ளன. என்றாலும் தமிழ்மரபின் நீட்சி அறுந்துவிடாமல் படைப்பாளர்கள் பேணிக் காத்துள்ளனர். ஆத்திசூடி என்னும் ஓரடி கவிதை இலக்கியம் கட்டளை வாக்கியத்தில் அமைந்தாலும் அறம் சார்ந்த நீதிக் கருத்துக்களை முன் வைப்பன. அ.சிவபெருமான் இயற்றியுள்ள 'ஆசிரியர் ஆத்திசூடி' இன்றைய ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு சொல்லும் பாங்கில் இருக்கின்றது. ஆசிரியர் நாளும் கற்கும் மாணவர், அவர் குருவல்ல என்னும் மையக் கருத்தை முன்வைத்து இவ்விலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. மாணவர் நலனையே முன்வைத்துப்; பாடப்பட்டுள்ளது. இவ்விலக்கியக்

கருத்துக்கள், நியூயார்க்கில் இயங்கி வரும் Indeed Editorial Team என்ற ஆசிரியர் தேர்வு வாரியத்தின் ஆசிரியர் திறன்கள் குறித்த பரிந்துரைகளை ஒத்திருக்கின்றன.

**சான்றெண் விளக்கம் :**


1. தொல். செய். நூ. 167
2. சுப்புரெட்டியார், ந., தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி - முறைமை, ப. 219
3. சிவபெருமான், அ., கொரோனா ஆத்திசூடி, ப. 17
4. Janelle Cox, 15 Professional Development Skills for Modern Teachers, Teach Hub.com
5. https://www.indeed.com/lead/indeed-editorial-team
6. நன்னூல், பாயிரம், நூ 38
7. திருவள்ளுவர், திருகுறள், குறள்., 28
8. தொல்காப்பியர், தொல்காப்பியம், செய்., நூ 17


**துணைநூற்பட்டியல்**


1. தொல்காப்பியர், தொல்காப்பியம், பாரி நிலையம், சென்னை. 1996
2. பவணந்திமுனிவர், நன்னூல், தாமரை வெளியீட்டகம், தஞ்சை., 2003
3. திருவள்ளுவர், திருக்குறள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2016
4. அ.சிவபெருமான், ஆசிரியப் பணியே அறப்பணி, கயிலாயநாதர் பதிப்பகம், குகையூர், 2017
5. மேற்படி., கொரோனா ஆத்திசூடி, கயிலாயநாதர் பதிப்பகம், குகையூர், 2020
6. கதிர் முருகு, பிற்கால நீதி இலக்கிய வரலாறு, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை. 2010
7. A.H.Komala, Educational Activities, Saratha Pathippagam, Chennai. 2009
8. ஆர்.திருஞானசம்பந்தம், வரலாறு கற்பிக்கும் முறைகள், சாந்தா பதிப்பகம், சென்னை, 2005
9. ந.சுப்புரெட்டியார், தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி - முறைமை, ஐந்திணை பதிப்பகம், சென்னை. 1988
10. வ.செ.குழந்தைசாமி, இது கல்வி யுகம், பாரதி பதிப்பகம், சென்னை. 2001
11. https://www.indeed.com/lead/indeed-editorial-team